பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 100

05.10.2026

லஞ்சம் கேட்டு பெற்ற வருவாய் ஆய்வாளர் கைது

புகார்தாரர் திரு.மனோஜ் குமார், செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டம், செம்பாக்கத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தனது பெயரில் ஒரு குடியிருப்பை வாங்கி பின்னர் பட்டாவில் தனது தந்தையின் பெயர் தவறாக பதிவு செய்யப்பட்டிருந்ததை திருத்தம் செய்யக்கோரி விண்ணப்பித்திருந்தார். மேற்படி விண்ணப்பம் உரிய கிராம நிர்வாக அலுவலருக்கு அனுப்பப்பட்டு, அவர் சம்பந்தப்பட்ட சொத்தை நேரில் ஆய்வு செய்து மேல் நடவடிக்கைகாக தனது அறிக்கையை வருவாய் ஆய்வாளரிடம் சமர்ப்பித்துள்ளார். திரு.பிரசாந்த், வருவாய் ஆய்வாளர், சிட்லபாக்கம் பிர்கா, தாம்பரம் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம் அவர்கள் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்ய தனக்கு லஞ்சமாக ரூ.4,000/- கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை செங்கல்பட்டு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 05.10.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.பிரசாந்த், வருவாய் ஆய்வாளர், அவர்கள் ரூ.4,000/- லஞ்ச பணத்தை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

PRESS RELEASE – 100
05.10.2026

REVENUE INSPECTOR ARRESTED FOR BRIBE

The complainant, Tr. Manoj Kumar, residing at Sembakkam, Tambaram Taluk, Chengalpattu District, had purchased an apartment in his name and subsequently applied for correction of his father's name in the patta, wherein his father's name had been wrongly recorded. The said application was forwarded to the concerned Village Administrative Officer for verification. The VAO inspected the property and submitted his report to the Revenue Inspector for further necessary action. Tr.Prasanth, Revenue Inspector, Chitlapakkam Firka, Tambaram Taluk, Chengalpet district demanded a bribe of Rs.4,000/- from the complainant for processing the application. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Chengalpet detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (05.10.2026). During trap proceedings, Tr.Prasanth, Revenue Inspector, demanded and accepted the bribe amount of Rs.4,000/- from the complainant. The accused was arrested and sent to judicial custody.